468

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்



மலர் 28 | பிங்கள ௵ ஐப்பசி இதழ் 1௳ [17—10—77] | இதழ் 10

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

## ஞானசம்பந்தரும் நற்றமிழும்

திரு, சு. இராமலிங்கம் அவர்கள்,
[கணித ஜோதிடர்] ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்,
சீகம்பட்டி புதுப்பட்டி P. O.,

———

2-ந் திருமுறை: பண்: நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

மாணிதன்னுயிர் மதித்துணவந்த அக்காலனை உதைசெய்தார்
பேணியுள்கு மெய்யடியவர் பெருந்துயர்ப் பிணக்கறுத்தருள் செய்வார்
வேணி வெண்பிறையுடையவர் வியன்புகழ்ச்சிர புரத்தமர்கின்ற
ஆணிப்பொன்னினை அடிதொழும் அடியவர்க் கருவினை யடையாவே.

திருச்சிற்றம்பலம்

பரங்கருணைத் தடங்கடலாகிய அம்பலவாணரருட் பெருக்கினாலே, திருச்சிரபுரத்து திருப்பதிகத்தில் நான்காவது திருப்பாடலை அநுபவிப்போமாக. பிரமசாரியாகிய மார்க்கண்டேயருடைய உடலைப் பிரிக்க வந்த இயமனை. சிவபெருமான் தமது திருப்பாதத்தால் உதைத்துக் கொன்றருளினார், என்பது முதலடியின் பொருளாகும். சிவபெருமான் செய்தருளிய வீரச் செயல்கள் பல அதில். எட்டுச் செயல்கள் முக்கியமானவையாக அட்ட வீரச்செயல் என்று நூல்களிலே பேசப்படுகின்றது. எட்டு என்னும் எண் மிகச் சிறப்பானதாகும். சிவபெருமானுடைய குணங்கள் எட்டு சிவபெருமானுடைய தோள்கள் எட்டு, சிவபெருமான் வீற்றிருந்தருளும் மூர்த்தம் எட்டு, சிவபெருமான் அருளிய ஆகமம் 28, அவர் எழுதிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாவது திருமுறை. அவர் செய்தருளிய வீரச் செயல்கள் எட்டு, மங்கலப் பொருள்கள் எட்டு. இதனால் எட்டு எவ்வளவு மங்கலம் பொருந்திய எண்ணாக அமைந்துள்ளது. இதையறியாத மாந்தர் பலபேர்கள். எட்டுக் கூடாது கெட்ட எண். என்று ஒதுக்குகிறார்கள் இது மிக அறியாமையாகும். நல்லனவற்றை தீயவையென்றும், தீயவைகளை நல்லனவென்றும் உரைக்கின்ற உணர்கின்ற மக்கள்தான் உலகிலே அதிகமாக இருக்கிறார்கள். சிவபெருமான் செய்

தருளிய வீரச்செயல் எட்டும் எட்டுத் திருத்தலங்களிலே செய்தருளினர். 1. திருக்கண்டியூரில் பிரமனைச் சிரங்கொய்தார். 2. திருக்கோவலூரிலே அந்தகாசுரனை சங்கரித்தார். 3. திருவதிகையில் திரிபுரத்தை எரித்தார். 4. திருப்பறியலூரில் தக்கன் சிரத்தைக் கொய்தார். 5. திருவிற்குடியில் சலந்தரனைச் சங்காரம் செய்தார். 6. வழூவூரில் யானையை உரித்தார். 7. திருக்குறுக்கையில் காமனை எரித்தார். 8. திருக்கடவூரிலே இயமனை உதைத்தார். இதனுல் இந்த எட்டுத் திருத்தலமும் அட்டவீரட்டானம் என்று வழங்கப் பெறும். ஒரு தனிப்பாடல்,

பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல்புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தான் விற்குடிமா வழூவூர்
காமன் குறுக்கையமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றை யுந்திங்களுஞ் சூடிதன் சேவகமே.

என்னும் பாடலால் தெளியலாம். மிருக கண்டுய மகரிஷியென்பவர், சிவபெருமானை பிள்ளைவரம் வேண்டினர். அவர், தரிசனந் தந்து ஞானமும் அழகும் பதினறு வயதுடைய பிள்ளை வேண்டுமா அல்லது ஊனமும் அழகில்லாமையும் நூறு வயதுள்ள பிள்ளை வேண்டுமா என்று கேட்டருளினர். மிருககண்டுயர் அறிவிற் சிறந்தவராதலால் அறிவும், அழகும் ஆண்டு பதினறுடைய குழந்தையே வேண்டுமென்ருர். அப்படியே கொடுத்தருளினர். குழந்தை பிறந்தது, மார்க்கண்டன் என்னும் நாமஞ் சூட்டி வளர்த்தனர். ஆண்டு பதினறு அடுத்தது, மிருககண்டுயரும் மருத்துவதியும் கவலையுற்றனர். மார்க்கண்டேயர் தாய் தந்தையைக் கேட்டார். அவர்கள் விபரத்தைக் கூறினர்கள். உடனே அவர் தாங்கள் விசனப்படவேண்டாம். உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானை அருச்சித்து எமனை வென்று உங்களிடம் வருகிறேன் என்று கூறினர். கந்தபுராணங் கூறுகின்றது.

என்றுரைசெய்த தாதை இடருறு முகத்தை நோக்கி
ஒன்றுநீர் இரங்கல் வேண்டாம் உயிர்க்குயிராகி யென்றும்
நின்றிடும் அரனையேத்தி அருச்சனை நிரப்பிக் கூற்றின்
வன்றிறல் கடந்து நும்பால் வல்லை வந்தடைவன் மன்னோ.

என்றுகூறி. காசியம்பதி மணிகர்ணிகை என்னுந் தலத்தில் சிவலிங்கத் திருவுருச் செய்து சிவாகம முறைப் படி சிவபெருமானைப் பூசை செய்து வந்தார். பதினறு வயது கணக்கு முடிந்ததும், எமதூதர்கள் வந்து மார்க் கண்டேயரை அணுகப் பயந்து சென்றுவிட்டார்கள். காலன் என்பவன் மார்க்கண்டேயரிடம் பயந்து வந்து நின்று பணிந்து, எமதருமன் தாங்களை அழைத்து வரச் சொன்னுர். வந்தால், எமன் உங்களை வணங்கி இந்திரன் பதத்தை வழங்குவான். என்று கூறினன் அது கேட்ட மார்க்கண்டேயர் கூறுகிறுர். கந்தப்புராணப் பாடல் படியுங்கள்.

மாற்றமிங்கிது கேட்டலும் மதிமுடி அரனைப்
போற்றுமன்பர்கள் இந்திரன் உலகினும் போகார்
கூற்றுவன்றன துலகினும் நும்மொடு குறுகார்
ஏற்றமாகிய சிவபதம் அடைந்தினி திருப்பார்.

நாதனுர்தம தடியவர்க் கடியவன் நானும்
ஆதலானும தந்தைன் புரந்தனக் கணுகேன்
வேதன் மாலமர் பதங்களும் வெஃகலன் விரைவில்
போதி போதியென்றுரைத்தலும் நன்றெனப் போனுன்.

காலன் தொழுது சென்றுன், இயமன் வந்தான், எருமைக் கடாவில் சூலம், தண்டம், பாசம் இவைகளை கையில் வைத்துக் கொண்டு, நெருப்பு கண்களில் பொழிய, மார்க் கண்டேயரை அணுகி கோபித்து புறப்படு, எமபுரத்துக்கு என்று கூறினன். அதுகேட்ட மார்க்கண்டேயர் கூறுகிறுர். என்னைப் போன்ற சிவனடியார்கள், பிரமவிஷ்ணு

இந்திரன் முதலான தேவர்களேயும் பொருளாக எண்ண மாட்டார்கள். அவர்கள் லோகத்துக்குஞ் செல்லமாட்டார்கள் சிவலோகத்துக்குச் செல்லுவார்கள். அவர்கள் தன்மையை சிறிதும் நீ உணரவில்லை· இப்போது எனக்குத் தீங்கு நினைக்கின்ருய். இது உனது உயிருக்கும் தலைமைக்கும் கெடுதலைக் காட்டுகின்றது. உடனே போய்விடு என்று கூறினர். இயமன் கோபித்து பாசத்தை வீசினன். சிவபெருமானை மார்க்கண்டேயர் இறுகப் பிடித்துக் கொண்டார், சிவபெருமான் தோன்றி குழந்தாய் அஞ்சாதே என்று கூறியருளி, இடது திருவடியால்சிறிது இயமனை உதைத்தார். சூலம், பாசம், தண்டம், தலைமை எல்லாம் சிதற, மிகத் தூரத்திலே குப்புற விழுந்து இறந்தான். தேவர்கள் நடுங்கினர்கள், எமன் ஏறிவந்த கடாவும் அவனேடு வந்த சேனையும் இறந்து போயின. சிவபெருமான் மார்க்கண்டேயரை கடாக்ஷித்தருளி, மைந்தனே நம்மை முறையாக மெய்யன்போடு பூசை செய்தபடியால் முடிவில்லாத ஆயுள் உமக்குத் தந்தனம் என்று அருள் செய்தார்.

மைந்த நீநமை வழுத்தி மாசிலா
முந்து பூசனை முயன்ற தன்மையால்
அந்தமில்லதோர் ஆயுள் நிற்கியாந்
தந்து நல்கினும் என்று சாற்றினன்.

ஆகவே, எமனை வெல்ல ஒரேவழி. சிவபெருமானைப் பூசிப்பது ஒன்றேயாம். அப்பர் சுவாமிகள் பாடுகிருர். மார்க்கண்டர் அருள் பெற்றதை,

நீற்றினை நிறையப்பூசி நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டு மந்தணனுரைக் கொல்வான்
சாற்று நாளற்ற தென்றே தருமராசற் காய்வந்த
கூற்றினைக் குமைத்தார் போலும் குறுக்கை வீரட்டனுரே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார்.

தஞ்சம் என்றுதன் தாளது வடைந்த
பாலன் மேல்வந்த காலனை உருள
நெஞ்சில் ஒருதை கொண்ட பிரானை
நினைப்பவர் மனம் நீங்ககில்லானை
விஞ்சை வானவர் தானவர்கூடி
கடைந்த வேலையுள் மிக்கெழுந் தெரியும்
நஞ்சம் உண்ட நல் ளாறனை யமுதை
நாயினேன் மறந்தென் னினைக் கேனே.

என்று மார்க்கண்டேயர் வரலாற்றை பல அடியார்கள் பல பிரகாரஞ்சொல்லி மகிழ்கின்றார்கள். எல்லாரையும் கொல்லுகின்ற இயமனை சிவபெருமான் கொன்றார் வேறு கெட்டியுள்ள தெய்வங்கள் எதுவும் இயமனைக் கொன்ற தாக வரலாறு இல்லை. உலகத்தைப்படைப்பவன் பிரம தேவன் அவன் தலையில் ஒன்றைக் கிள்ளினார். அவன் படைத்துக் கொள்ளவில்லை. எல்லாரையும் உடலைப் பிரிக்கின்ற இயமன் உடலை பிரித்தார். அவன் ஒன்றும் செய்ய இயலவில்லை. இதனால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் வல்லவர். தலைவர் சிவபெருமான் ஒருவரேயென்பது இவ்வரலாற்றால் தெளி யலாம். சிவனடியார் எமனுக்கு பயப்படவேண்டியதில்லை. அப்பர் சுவாமிகள் எமதூதர்களைக் கூப்பிட்டு உத்திர விடுகிறார் கேளுங்கள்:

"இறையென் சொல்மறவேல் நமன்தூதுவீர்.
பிறையும் பாம்புமுடைப் பெருமான்தமர்.
நறவம் நாறிய நல்நறுஞ்சாந்திலும்.
நிறைய நீறணிவாரெதிர் செல்லலே."

சிவபெருமானை வணங்குகிற அடியார்களிடம் போய்விடா தீர்கள், என்று அருளிச் செய்கிறார். இயமன் தன்னு

டைய தூதுவர்களை அழைத்துக் கூறுகின்றனும் தூதுவர்களே சிவபெருமானை வணங்குகின்ற மெய்ப்பத்தர்களை கண்டால் அவர்களை வணங்கிவிட்டு எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் அகன்று போய் விடுங்கள் என்று சிவனடியார்களை வணங்கி கூறுகிருனும். பதினேருந்திருமுறையில் நக்கீரதேவ நயனுர் அருளிச் செய்கின்றுர்.

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில் சீர்க்காளத்திமன்னன் - பழுதிலாப்
பத்தர்களைகண்டாற் பணிந்தகலப்போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக என்று

அருணகிரிநாத சுவாமிகள் பாடுகிறுர்.

தண்டாயுத முந்திரிசூலமும் விழத்தாக்கி உன்னை
திண்டாடவெட்டிவிழ விடுவேன் செந்தில்வேலனுக்கு
தொண்டாகிய என்அவிரோதஞானச் சுடரவடிவாள்
கண்டாய்அடா அந்தகாவந்துபார் சற்றென்கைக்கெட்டவே.

என்று எமனை விரட்டுகிறுர்.

சிவபெருமானைத் தோத்திரம் செய்ய வாயும் நாவும் இருக்கிறது. அவனைப் பூசைசெய்ய பூவும் நீரும் இருக்கிறது. சிவபெருமானும் நாமும் இருக்கிறேம். இயமனுக்கும் நமக்கும் எந்தவித தொடர்பும்இல்லை. இயமன் நம்மை வணங்குவானே அன்றி கோபிக்கமாட்டான். இப்படி வழி இருக்க இயமன் கோபித்து வருத்தும் படியாக நடந்து கொள்கிருர்களே என்று வருந்துகிருர் அப்பர்சுவாமிகள்.

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளோ நாமுளோம்
எற்றுக் கோநமனுல் முனிவுண்பதே.

என்று தெளியவைக்கிருர். சிவபெருமானுடைய பஞ்சாக்கரத்தை விதிப்படி ஓதுபவர்கள் எமனுக்கு அஞ்சாமலிருக்கலாம். சம்பந்தசுவாமிகள் பாடுகிருர்.

துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகநைந்து நினைமின் நாள்தோறும்
வஞ்சகம் அற்றடிவாழ்த்த வந்தகூற்று
அஞ்சவுதைத்தன அஞ்செழுத்துமே.

இந்த நெறியை விட்டுவிட்டு வெவ்வேறு நெறிகளிலே சென்று தவமென்று சொல்லி அவத்தைச் செய்கின்ருர்களே. அவர்களை இயமன் தேடிப்பிடித்து வருத்துவானே அப்பொழுது என்ன செய்வார்கள் என்கிருர் தாயுமான சுவாமிகள் பாடலை நன்ருகப் படியுங்கள்.

ஆடுங்கறங்குந் திரிகையும் போலஅலைந்தலைந்து
காடுங்கரையுந்திரிவதல்லால் நின்கருணை வந்து
கூடும்படிக்குத் தவமுயலாத கொடியர் எமன்
தேடும்பொழுதென்ன செய்வார் பரானந்த சிற்சுடரே

என்று பேசுகிருர். தவம்செய்து ஞானமென்கிறவாள் கையில் வைத்திருப்பவர்கள் எமனுக்கு அஞ்சவேண்டியதில்லை. திருமூலர் பாடுகிருர் கேளுங்கள்.

நமன்வரில் ஞானவாள் கொண்டே எறிவர்
சிவன்வரில் நானுடன் போவது திண்ணம்.

என்று அருளுகிருர். நமனுலகு செல்லாத வழிக்குச் செல்வம் தேடிக்கொள்ளவேண்டும் அல்லாமல் சும்மா இருப்பவர்களெல்லாம் எமனுலகத்தில் சென்று மிகுந்த துன்பமடைவார்கள். சிவபெருமானை பூவும் நீருங் கொண்டு விதிப்படி பூசித்தால் எமபயமில்லை தாயுமானர் பாடுகிருர்.

மார்க்கண்டருக்காக மறலிபட்டபாட்டையுன்னிப்
பார்க்கினன்பர்க் கென்னபயங்காண்பாரபரமே.

என்கிறார். இக்கருத்துக்களை மாணிதன்னுயிர் மதித்துண வந்த அக்காலனை உதைசெய்தார் என்பதால் தெளிய வைக்கிறார் ஞானசம்பந்தசுவாமிகள். இனி இரண்டாவது அடியின் பொருளைப்பார்ப்போம் வழிபாடுசெய்து சிந்திக் கின்ற அடியார்களுடைய பெருந்துன்பங்களையும் மாறு பாடான புத்தியையும் போக்கி அருள்புரிவார் என்பதாம் சிவபெருமானை நாள்தோறும் பூவும் நீருங்கொண்டு வாக்கு மனங்காயம் மூன்றாலும் வழிபாடு செய்து அவன்திரு வடிக்கு அடைக்கலம் புகுந்த அடியார்களுடைய துயரங் களை சிவபெருமான் நிச்சியமாகப் போக்கிவிடுவார் என் பதில் ஐயம்இல்லை. திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலே சம்பந்த சுவாமிகள் அருளுகிறார்.

உண்டாய்நஞ்சை உமையோர்பங்கா என்றுள்கித்
தொண்டாய்த்திரியும் அடியார்தங்கள் துயரங்கள்
அண்டாவண்ணம் அறுப்பான் எந்தைஊர்போலும்.
வெண்டாமரைமேற் கருவண்டு யாழ்செய்வெண்காடே.

என்கிறார். தொழுவார் அவர் துயராயின தீர்த்தலுன தொழிலே என்கிறார், சுந்தரமூர்த்திசுவாமிகள். நம் முடைய தீவினையின் படிதுயரங்கள் உண்டாகும் ஆனால் சிவபெருமானை வழிபடுவார்க்கு துயரங்கள் குறைந் தொழியும் இனிமாறுபாடான புத்தியென்பது தீநெறியில் ஐம்பொறிகள் செல்லுவதாம். பார்க்கக்கூடாதவற்றைப் பார்த்தலும் கேட்கக் கூடாதவற்றை கேட்டலும் தீண்டக் கூடாதவைகளை தீண்டுதலும். நினைக்கக் கூடாதவைகளை நினைத்தலும் பேசக் கூடாதவைகளைப் பேசுதலும் தீநெறியாம். சிவபெருமானை வழிபடும் அடியவர்களை அப்படித்தீநெறியிலே செல்லவிடாது நன்னெறியிலே செலுத்தி யருள்புரிவாரென்பது திண்ணம் இனிமூன்றாவது அடியின் பொருளைப் பார்ப்போம். திருச்சடையிலே

வெண்மையான சந்திரனை உடையவன் என்பதாம். சந்திரனுக்கு வந்த துயரம் அளவில்லாதன அவன் பிரம விஷ்னு வாதி தேவர்களிடம் சென்றும் தனது துயரம் தீரவில்லை, கடைசியில் சிவபெருமானுடைய திருவடியிலே அடைக்கலம் புகுந்தான் அவன் துயரங்கள் ஓடிவிட்டன. அவன் சிவபெருமான் திருமுடியிலேயிருந்து பெருமை பெற்று விளங்குகிறான் நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே என்றபடி எல்லாம் உன் செயலே என்றும் தன்கடன் அடியேனையுந்தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே என்று உறுதியாக அடைக்கலம் புகுந்த மெய்யடியார் துயரங்களனைத்தும் போய்விடும். இதற்கு சாட்சி சந்திரனே. பரந்தபெருமை யுடைய சிரபுரமென்னும் சீகாழிப்பதியில் எழுந்தருளி யிருக்கும் ஆணிப்பொன்னாகிய சிவபெருமானை வணங்கி அவன் திருவடிகளைத் தொழுகின்ற அடியார்களுக்கு இருள்சேர் இருவினையென்னும் அருவினை அடையாது என்பதாம் நான்காமடியின் பொருள் பூவும் நீரும் கொண்டு வழிபட்டால் எமனைவெல்லலாம் துயரங்கள் போகும் நல்லபுத்திஉண்டாகும். அருவினைகள் சேராது என்னுங்கருத்துக்கள் இப்பாடலின் மூலம் உணர்ந்து அந்த நெறியிலே ஞானசம்பந்தர் திருவாக்கை நம்பி வழிபட்டு துன்பங்களைப் போக்கி இன்பத்தையடைய அன்பர்கள் முயலுவார்களாக.

(தொடரும்)



# 'இடுக்கண் வருங்கால் நகுக'

திரு, K. M. ஜெயராமகிருஷ்ணன், அவர்கள்,
குமரலிங்கம்.

---

அரசன் முதல் ஆண்டி வரை உலகில் உள்ள அனைவரிடமும் ஒரு சொல் மிக்க உறவுத் தன்மை கொண்டாடி வருகிறது எனின் அது 'கவலை' என்ற சொல்லேயாகும். அதனையே 'துன்பம்' என்றும் கூறலாம்.

பாலுக்குச் சர்க்கரை இல்லையென்பார்க்கும், கஞ்சிக்கு உப்பில்லையே என்பார்க்கும் கவலை ஒன்றே. கையில் பணம் இருந்தால் கவலை, இல்லாவிட்டாலும் கவலை. இந்தக் கவலைக்குத்தான் நம்மீது எவ்வளவு பாசம்! எப்படியோ ஒருவகை சொல்லி நம்மைச் சார்ந்து விடுகின்றது. கவலைக்குகாலம் உண்டா? இல்லை. சின்னஞ் சிறுபிராயம் முதல் பழுத்து உதிரும் முதுமைக் காலம் வரை இவை தொடர்ந்து வருகின்றன.

இது எதனால்!

தமிழ் மூதாட்டி ஔவையார் கூறினார்கள். 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்று, "ஆம்" மானிடப் பிறவியே மற்றைப் பிறவிகளிலும் மேம்பட்டது எனின் நாம் ஏன் மகிழ்வாக இருக்க முடிவது இல்லை. நம்மினும் தாழ்ந்த விலங்கினங்களும்கூட மகிழ்ந்து வாழும் போது நாம் ஏன் மகிழ்வாக இருக்க முடியவில்லை என

எண்ணுகிறது நம் மனம். அப்படியெனில், அப்பெருமகள்-தமிழ்த் தாய்-கூறிய மொழியில்-கருத்தில்-குறைபாடா! சீ......சீ......என்னத் தப்பான கணக்கு! மாம்பழத்தை நறுக்கும் முன்பே அது கசக்கும் என்ருல் அது எவ்வளவு டண்மையாக அமையுமோ அத்துணை அளவு நமது கருத்து நகைப்பிற்கிடமாக அமையும்

உலகம் எங்கெனும் மானிடர்கள் - ஏதோ ஒரு காரணத்தை கூறி 'கவலை' என்று அதற்கு உருவமைத்து அதை மிகைப்படுத்தி அதை வளர்த்து—அதற்கே முடிவில் பலியாகி மடிவதைக் காண்கிருேம். வலுவற்ற பூச்சி எவ்வாறு சிலந்தி வலைப்பட்டு முடிவில் தன்னையே முடித்துக் கொள்கின்றதோ அவ்வாறே அப்பாமர மக்கள் நிலையும் அமையும் தன்மையை காண்கிருேம்.

கவலைபலவகைப்படும் பணக்கஷ்டம், உடல்கஷ்டம், உறவினர் தொல்லை, தான் செய்த தவறுகள் இவைகளின் நிமித்தமாக தோன்றுகின்றன. இதனையே—அடிப்படையாக அமைத்து 'துன்பத்திற்கான காரணம் ஆசை. ஆசையை ஒழித்தால் துன்பத்திலிருந்து விடுபடலாம்'—என்ருர் புத்தர் பெருமான்.

ஆசையே இல்லாமல் வாழ முடியுமா? சாதாரண மானிட வாழ்க்கையில் இது சாத்யப்படாமல் போவதுசர்வ சாதாரணம். குடும்ப வாழ்க்கையில் பிரவேசித்த ஒருவன் துறவு வாழ்வை மேற்கொள்வது இயலாதது—அதாவது, எல்லோரும் சுலபமாகப் பின்பற்ற இயலாது என்பதனுல் தான் ஆசையை ஒழிக்க முயல்வது கடினம் என்று கூறினேன். ஆனுல், ஆசையை ஒழிக்க முடியாதே—அப்படியென்ருல் துன்பத்துக்கு முடிவில்லையா? இது ஒரு சாரரர் கேட்கும் கேள்வி!

உண்டு! உண்டு!! நிச்சயம் உண்டு!!! என்று திடமாகக் கூறுவேன். ஆசைப்படுவதற்கும் ஓர் 'அளவு' வைத்தால் அது நமக்கு ஆபத்தை விளைவிக்காதல்லவா, உள்ளதைக் கொண்டு திருப்திப்படும் 'மனநிறைவை' ஏற்படுத்திக் கொண்டால் 'துன்பம்' துளிர்விட வழியில்லையே. சற்று சிந்திப்போம்.

மானிடப் பிறவி உயர்ந்த பிறவி. அதுவும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறந்தஇப்பிறவி உண்மையிலேயே பெறற்கரும் பிறவிதான்! 'இதில் என்ன சந்தேகம்?'

நீ உன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்! உனக்கு கண் உண்டு, காது உண்டு, பேச நாவுண்டு, நோயற்ற திடமான தேகம் உண்டு. பின் ஏன் கவலைப்படுகிறாய்?

குருடனைவிட, செவிடனைவிட, தொழு நோய்பட்டு திரிபவர்களைவிட நீ உயர்ந்த நிலையில் உள்ளமைக்கு திருப்திப்படு! அவர்களைக் கண்டு எள்ளி நகைக்காதே! அவர்களும் உன் சகோதர, சகோதரிகள் என்பதை மறவாதே!!

கையில் காசில்லையே என்று ஏன் கவலைப்படுகிறாய்? உனக்குத் தேவையானது உணவும், உடையும் தானே— அது போதாதா பசித்தவனுக்கு ருசி எதற்கு என்பது போல, நீ உன் பசிக்கு உணவு அருந்தினால் அதன் மாட்டு 'ருசி' ஏன் தோன்றுகிறது. அப்போது கவலையும் தோன்றுவதில்லையே.

காலை நேரத்தில் கீழ் வானத்திலே பவனி புறப்படும் பரிதியினை பார்—வண்ண வண்ண ஜாலங்களை வானத்திலே தெளித்து அவன் செய்யும் விந்தையினைப் பார். இரவினிலே முழுமதியும், விண் மீன்களும் நிலவானிடை

மின்னிடும் காட்சிகளைப் பார். இவைகளை நீ எவ்வளவு பணம் கொடுத்து வாங்க முடியும்! இதற்கென நிர்ணயிக்கப்பட்ட விலைமதிப்பு ஏதேனும் உண்டா? தெள்ளிய ஆற்று நீரில் நீந்திடும் மீன் இனமும்: வானமண்டலத்திலே வட்டமிடும் புள்ளினமும் பாசம் நீக்கி, சுதந்திர எண்ணமுடன் திரிந்து வருவதைக் கண்டும் ஏன்மௌனம் சாதிக்கிறாய். நீ உன் வாழ்வை மலரச் செய்ய முயன்றால் முதலில் உன்னை விடுவித்து கொள் என்பது போல நீ வெறும் வீணான ஆசைகளுக்கு மனதை அடிமையாக்காதே. துன்பம் தோன்றும் போது அதை எதிர்த்து நின்று செயல்பட முயற்சி செய்.

நம்மையும், நாம் வாழும் இப் பேரண்டத்தையும் படைத்த ஒரு மாபெரும் சக்திக்கு 'இறைவன்' எனப் பெயரிட்டு வணங்கு. உன் சொல்லும், செயலும் சத்தியத்தின் நிழலாக அமையட்டும். பெற்றோரை வணங்குதல், குருவை வணங்குதல், உண்மை பேசுதல் முதலிய நற்பண்புகளை உன் வாழ்வின் எதிர்காலக் கட்டட நிர்மாண வேலைக்கு அஸ்திவாரமாக அமைத்து நீ முன்னேறு!

மதக்கோட்பாடுகளையும், ஆன்றோர் பொன் மொழிகளையும் போற்று. கிடைத்த நேரத்திலெல்லா உண்பதும், உறங்குவதுமாக இவ்வாழ்வைக் கழிக்காதே. நாலடியார், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், திருக்குறள், இராமாயணம், தேவாரம், திருவாசகம் இது போன்ற பழங்கால நூல்களைப் படி. அவற்றின் கருத்துக்களை உன் மனதில் இருத்தி நட!

'செய்வன திருந்தச் செய்' — 'எண்ணித் துணிக கருமம்' என்ற கருத்துப்படி நடந்து நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்லவனாக நடந்தால் 'இடுக்கண் தோன்றுமா?

மாசற்ற நிலையில் வாழ்ந்திடும் தூய்மையான மனம் பெற்ற உன்னைக் கண்டு 'இடுக்கண்' அஞ்சும். நீ துன்பத்தை 'வா' என்று கூப்பிடு. அது சற்று தயங்கி உன்னை நோக்கும். நீ அதைப் பார்த்து 'நகைத்தால்'— அது அஞ்சும்—தனக்கு ஏதேனும் விளையுமோ என்ற அச்சத்தால் 'பேரச்சத்தால்' உன் இடம் விட்டே ஓடும். எனவே 'இடுக்கண் வருங் கால்நகுக' என்ற வள்ளுவன் கருத்தை நாம் மனதிற் கொண்டு—நற்றுணையாக அமைந்திடும் நாதன் நாமம் போற்றி—அவன்தாள்பணிவோமாக!

**வணக்கம்!**

---



# வேண்டுவது எது?

திரு, அரங்க: முத்துமணி அவர்கள்,
உதவிப் பதிவாளர்,
தஞ்சாவூர்—613001.

மனிதனுடைய துன்பங்களுக்குக் காரணம் ஆசை. கிடைத்தவற்றைக் கொண்டு நிறைவு பெருது, மேலும் மேலும் கிடைக்க வேண்டும் என்ற ஆசையை வளர்த்துக் கொண்டு போவதால்தான், மனிதன் அமைதியில்லாமல் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதுடன், முடிவில், ஏதோ ஒப்புக்கு இறைவனை வணங்கி விட்டதாகத் தானே ஒரு செயற்கையான நிறைவை ஏற்படுத்திக் கொண்டு, ''இறைவனை வணங்கியும் என் குறைபாடுகள் தீரவில்லையே'' என்று அங்கலாய்த்துக் கொள்ளுகின்ருன்,

''ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈச னேடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே!''

என்ருர் திருமூலர். இன்னும் சில்லோர் ''ஏதாவது ஒரு பரிசுச் சீட்டின் பார்வை நம்மீது விழாதா?'' — என்று ஏக்கமுடன் இதயத்தில் ஆசையை வளர்த்துக் கொண்டு, வாழ்நாளை வீணே கழித்து வருதலையும் காண்கின்ருேம்.

நமக்கு என்ன வேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும். இதனை மணிவாசகப் பெருமான் தெளிவாகத் திருவாசகத்தில் தெரிவித்தருளுகின்ருர்கள்.

"வேண்டத் தக்கதறிவோய் நீவேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டிஎன்னைப் பணி
கொண்டாய்!
வேண்டி நீயாதருள் செய்தாய் யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில் அதுவும் உன்றன்
விருப்பன்றே!"

திருவாசகம்: (குழைத்தபத்து)

நமக்கு "வேண்டுவது எது" என்பது பற்றி மேலும் பார்ப்போம்.

காரைக்காலம்மையாரின் திருவுள்ளத்தையும், சேக்கிழார் பெருமான் அழகாகக் குறிப்பிட்டருளுகின்றார்கள். பெரிய புராணத்தில்,

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்: இன்னும்
வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க" என்றார்.

இப்படியொரு உயர்ந்த எண்ணம்—அதிலிருந்து எழுகின்ற வேண்டுதல், எல்லோருக்கும் ஏற்படின், துன்பத்தின் நிழலாவது மனிதன்பால் தொடருமா என்பதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பானுகோபனை வெற்றி கண்ட வீரவாகு தேவர் முருகப் பெருமானை அடைகிறார். வீரவாகு தேவரின் வெற்றியைக் கண்டு மகிழ்ந்த முருகப் பெருமான், "வேண்டும் வரந் தனைக் கேள்!" என்று திருவாய் மலர்ந்தருளியபொழுது,

வீரவாகுவின் திருவுள்ளத்தைக் கந்தபுராணத்திலே, கவினுறக் காண்கிறோம்,

"கோல நீடியநிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்;
மாலயன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்,
சாலநின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"

இத் தகைய எண்ணமும், வேண்டுகோளும் இருந்தாலன்றோ மனிதனின் வாழ்வில் அன்பும் அமைதியும் தோன்றும். வாழ்க்கை நிறைவுடையதாக மலரும்.

ஆனால் ஆணவத்தின் பாற்பட்ட மனிதர்கள் அனைவரும், "சூரபத்மன்"களாகவே வாழ முற்படுகிறார்கள். இறைவன், தானே எளியனாந் தன்மையிலே வந்து அருள்பாலித்தாலும், தங்களுக்குள்ள தருக்கினால், அவ்வருளைத் துச்சமென எண்ணி நச்சுமனங் கொண்டோராக நடமாடி வருகின்றனர்.

சூரபன்மனுக்குப் பன்னிரு தடந்தோள் வள்ளல் காட்சி கொடுத்தும், வணங்க வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றி வைக்கிறது ஆணவம். மானத்தைத் தூண்டிவிடுகிறது ஆணவம். எனவேதான்.

"சூழுதல் வேண்டும் தாள்கள்: தொழுதிட வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி; துதித்திட வேண்டும் தாலு;
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவர்க்காளாகி
வாழுதல் வேண்டும்; நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே"

என்ற சூரனின் வேண்டுகோள் நிறைவு பெறாததாக அமைந்துவிடுகிறது.

எனவே இறைவனுடைய திருவடித் தாமரை மலர்களில் தோன்றும் அருள் என்னும் தேனை வேண்டி,

உண்டாலே பிறவியென்னும் பிணி நீங்கும். பிறவிப் பிணி நீங்கினால், ஆசையில்லை. அதன் விளைவாகத் தோன்றும் துன்பமுமில்லை.

இறைவனிடத்து நாம் வேண்டக் கூடியது, பொன்னும் பொருளுமல்ல. வடலூர் வள்ளல் பெருமான் கூறுவது போல, தவறுகளைப் பொறுத்து, தலைவன் தாளைத் தர வேண்டுமென்பதே! இனி அப்பெருமானின் பாடல் முழுதும் ஒருமுறை பார்ப்போம்..... ...பயன் கொள்ளுவோம்.

"அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நானன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்ஙனும் நான் சென்றே
எந்தை நினதருட் புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே!"

- திருவருட்பா: (பிள்ளைச்சிறு விண்ணப்பம்)

# பாடும் பணியே பணி

வித்துவான்: திரு, வை. திருஞானசம்பந்தம் அவர்கள்,
ஈரோடு.

---

1. ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும்பணியே பணியா அருள்வாய்
தேடும்கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே.

**தெளிவுரை:**

தேவர்கள் அரக்கர்களின் துன்பங்களையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாமல் மறைந்து உறைந்த இடங்களையெல்லாம் தேடிச் சென்று தன்னை வழிபடும்படிச் செய்த யானை முகத்தையுடையவனாகிய கயமுகா சூரனைப் போர்க்களத்தில் தாக்கியழித்துப் பெருமை பெற்ற ஒப்பற்ற விநாயகக் கடவுளின் உடன் பிறந்தவராகிய முருகப் பெருமானே! உனது வாகனமாயிருக்கின்ற ஓங்காரமென்னும் பிரணவப் பொருளின் வடிவமாகத் தோகைகளை விரித்தாடுகின்ற மயிலையும், ஞானவடிவமாய் அமைந்துள்ள உனது திருக்கையிலுள்ள வேலையும்: கொக்கறக்கோ (கொக்கு+அறு+கோ) என்று எப்போதும் பிரணவத்தை ஒலித்துக் கொண்டே இருக்கின்ற உனது கொடியிலமைந்துள்ள சேவலையும் ஆகிய இம்மூன்றையும் நான் எப்போதும் துதித்துப் பாடுவதையே பணியாகக் கொண்டு எனது கடமையை நாள்தோறும் செய்ய எனக்கு அருள் செய்வாயாக என்று வேண்டுகின்றார்.

**விளக்கவுரை:**

ஆடும் பரி:– ஆடும் என்ற அடைமொழியால்சுமத்தல் என்கிறப் பொருளைத் தருகின்ற பரி இங்கு மயிலை உணர்த் திற்று. ஆடும் என்ற சொல்லில் 'ஆ' என்பதில் அகரமும், 'டு' என்பதில் உகரமும், 'ம்' என்பதில் மகரமும் நிற்பதால் ஆடும் என்பதில் 'ஓம்' என்கிறப் பிரணவப் பொருள் அடங்கியுள்ளது. ஆடும் ஆடும் என்று பலகால் ஓதினுல் ஓம் என்னும் பிரணவம் ஒலி உண்டாதலை அனுபவத்தில் உணரலாம். அகரவுகர மகரத்தால் ஓம் என்ற பிரண வத்தை ஒலி வடிவிலும், பிரணவ வடிவாமாயுள்ள மயில் தோகைகளை விரித்தாடும் பொழுது, வளைந்த கழுத்தும் விரிந்த தோகையும் தூக்கிய ஒரு காலும் ஊன்றிய பிறி தொரு காலும் ஆகிய இவ்வுறுப்புகள் பிரணவப் பொருளை வரி வடிவத்திலும் தெரிவிக்கின்றன. 'ஆடும் தனிமந்தர ரூபநிலை கொண்டது ஆடும் மயில் என்பது அறியேனே' என்ற திருப்புகழ் இதனை வலியுறுத்தும்.

முருகன் சூரபன்மனுடன் போர் செய்த போது வாகனமின்மையை உணர்ந்த இந்திரன் நீண்ட தோகை களுடன் கூடிய மயில் வடிவமெடுத்து மரகத மலை போல் நின்ருன் என்பதை,

> இந்திரன் அனையகாலை எம்பிரான் குறிப்பும் தன்மேல்
> அந்தமில் அருள்வைத்துள்ள தன்மையும் அறிந்து நோக்கிச்
> சுந்தர நெடுங்கண் பீலித்தோகை மாமயிலாய்த் தோன்றி
> வந்தனன் குமரன் போற்றி மரகத மலைபோல் நின்ருன்.

என்று கந்தபுராணம் கூறுகிறது, சூரபன்மனை வென்றபின் அவனே ஒரு கூறுமயிலாக நின்றபோது அவனைத் தனக்கு எப்போதும் வாகனமாகக் கொண்டார் என்பதைப்,

"போரவுணன் - அங்கம் இருகூருய் அடல்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்-அங்கவற்றுள்
சீறும் அரவைப் பொருத சித்ரமயில் வாகனமாய்
ஏறிநடாத்தும் இளையோனே"

என்ற கந்தர்கலி வெண்பா மூலம் உணரலாம். எனவே மயில் அரக்சனுடன் சம்பந்தமுடையதுபற்றி ஆடும்என்று அடைகொடுத்து ஆடும்பரி என்று அருணகிரி சுவாமிகளால் அமைக்கப்பட்டது.

நமது இந்தியப் பேரரசு ஓங்கார வடிவமாய் அமைந்துள்ள மயிலையே தேசிய பறவையாகத் தேர்ந்தெடுத்திலிருந்து பிரணவப் பொருளின் பெருமை வெளிப்படுகிறது. மேலும் நமது இந்தியாவின் வடிவமைப்பினைத் தேசப் படத்தில் காண்கிற போதும் ஓம் என்ற பிரணவ வடிவாயுள்ள நிலையையும் உணரலாம்.

கந்தரநுபூதி ஒரு மந்திர மாலையாதலின் முதற்பாடலின் 'ஆடும்' என்று தொடங்கி இறுதிப் பாடலில் 'குகனே' என்று முடித்திருப்பதனை ஒரே தொடராக்கிப் பார்க்கும் போது 'ஆடும் குகனே' என்று பொருள்படும் நயம் உணர்க. அதாவது குகனுக இருக்கின்ற முருகன் தன்னை வழிபடுகின்றவர்களின் உள்ளங்களில் (குகையில்) ஆடும் குகனுக அமர்ந்திருத்தலைப் பல்கால் ஓதி அநுபூதி நிலையைப் பெற வேண்டும். அநுபூதி நிலையைப் பெறுவதற்கு முருகனதடியார்கள் 'ஆடும்பரி வேல் அணி சேவல்' என்று பாடும் பணியையே பணியாகக் கொண்டால் அவர்களின் குகையில் என்றும் நின்று ஆடுவான் என்பது திண்ணம்.

வேல்:- தெய்வயானையார் கிரியா சக்தியாகவும் வள்ளி நாச்சியார் இச்சா சக்தியாகவும் முருகனின் திருக்

கையிலுள்ள வேல் ஞான சக்தியாகவும் சான்றோர்களால் கூறப்படுகின்றன. ஆணவ மலமாய் நின்ற சூரபன்மனை இரு கூருக்கியது வேலாதலின் அவ்வேல் மயிலுக்கும் சேவலுக்கும் இடையே நின்றது. முருகப் பெருமானுக்கு ஒப்பாகக் கூறப்படுவதாதலினுலும் மயிலும் சேவலும்' அசுர சம்பந்தமுடையதாதலினுலும் வேல் அடைமொழி யின்றிக் கூறப்பட்டது. 'சத்தியாம் பேர், தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேல் பெம்மான், கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தேம்' என்பது, கந்தபுராணம்.

முருகனுடைய வழிபாட்டில் வேலே சிறந்து நின்றது என்பதையும் ஆடுபவன் வேலன் என்று அழைக்கப்பட்டான் என்பதையும், 'வேலன் தைஇய வெறியயர் களனும் என்ற திருமுருகாற்றுப் படையின் தொடரால் அறியலாம். மேலும் உலகைச் சூழ்ந்துள்ள குளிர்ச்சி பொருந்திய கடல் கலங்கும்படி உள்ளே புகுந்து அரக்கர் கூட்டத்தின் தலைவனுகிய சூரபன்மனைக் கொன்றது வேல் என்பதை யும், சூரபன்மன்மாவின் வடிவாய் நிலைமாறி நின்றபோது இருகூருக்கியதும் வேல் என்பதையும்,

"பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்",

என்றும்,

"அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்[து]
எய்யா நல்லிசை செவ்வேல்"

என்றும் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

"மணித்திரைக் கடலுள் மாவெனக் கவிழ்ந்த
ளவுடல் பிளந்த வொளிகெழு திருவேல்]'

கல்லாடம்

மேலும் வடிவேல் கூர்வேல் கொற்றவேல் வெற்றிவேல் கதிர்வேல் வச்சிரவேல் என்ற அடைமொழிகளால் வேலின் பெருமையை உணரலாம், குன்றம் எறிந்ததுவும் குன்றப் போர் செய்ததுவும், அன்று அங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் இன்று என்னைக் கைவிடாது நின்றதுவும் கல்பொதும்பில்காத்ததுவும் திருமுருகனின் திருக்கையிலுள்ள வேலேயாகும். அந்த வேல் வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரிக்குளித்த வேல் கொற்ற வேல் சூர் மார்பும் குன்றும் துளைத்தவேல் என்றும் அழைக்கப்படுகிறது, மக்களுக்கு அஞ்சுமுகம் தோன்றிய போது ஆறுமுகம் தோன்றும். ஆனால் வெஞ்சமரில் அஞ்சேல் என்று வேல் தோன்றும் என்று அடைக்கலந் தருவது வேல் என்பதனை விளக்கியுள்ளார். இனி வெல் என்ற முதனிலை வேல் என நீண்ட முதனிலை தொழிற் பெயராயிற்று. எல்லாவற்றையும் வெல்லக் கூடியது ஞானமேயாதலின் வேலை ஞானத்துடன் தொடர்புபடுத்தி ஞான சக்தியாக நிற்பது வேல் என்றனர். அறிவு ஆழ்ந்தும் அகன்றும் கூர்மையாகவும் விளங்குமாறு போல வேல் கீழ்ப்பாகம் ஆழ்ந்தும் நடுப்பகுதி அகன்றும் நுனிப்பகுதி கூர்மையாகவும் உள்ளது. எனவே 'சேவலும் மயிலும் போற்றி; திருக்கைவேல் போற்றி' போற்றிஎன்று சேவலையும் மயிலையும் ஒருமுறை வணங்கி ஞானசக்தியாகிய வேலை இருமுறை வணங்கிய கச்சியப்ப சிவாச்சாரியாரின் கருணையுள்ளம் வெளிப்படுகிறது.

அணிசேவல்:- அணி-அழகு, முதனிலைத் தொழிற் பெயராகக் கொண்டு முருகப்பெருமானுடைய திருவடிகளை மக்களே 'நீங்கள் உங்கள் தலையில் அணிந்து கொண்டு

முருகா! முருகா!! என்று பலகால் ஓதிபேசா அநுபூதியைப் பெறுங்கள் என்று சொல்லுமாறு போல பிரணவப் பொருளை ஒலி வடிவமாகக் காலையில் மக்களுக்கு அறிவுறுத்தும் முறையில் கொக்கறக்கோ என்று கூவிக் கொண்டே இருக்கிறது. கொக்கு அறுகோ என்பதன் பொருள் மாமர வடிவாய் நின்ற சூரபதுமனைக் கொன்ற தலைவனாகிய முருகனே என்பது பொருளாகும்.

அண்மையில் உலகமே அதிரும்படியாக பூகம்பம் சீனாவில் தோன்றி இலட்சக் கணக்கான மக்கள் இறந்து போன செய்தியை நாமறிவோம். இந்த பூகம்பம் நிகழ இருப்பதை அங்குள்ள ஊர்வனவற்றுள் சிலவான பாம்பு, தேள் முதலியனவும், பறவைகளுள் சிலவும் இயற்கைக்கு மாறான நிலையில் திரிந்தன என்பதைப் பின்னே மக்கள் உணர்ந்து இவைகள் பூகம்பம் ஏற்படுவதை முன்னே அறிவிக்கும் அறிகுறி என உணர்ந்தனர். அதுபோல் நிலத்தில் உறங்குகின்ற சேவல் அந்த நிலத்தில் தோன்றுகின்ற மணத்திற்கும் அதன் கொண்டைக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதாகவும் அத்தொடர்பினாலேயே விடியற் காலையின் சூரிய உதயாதியை உணர்ந்து கூவுவதாகவும், முதல்நாள் ஒரு சேவல் கூவுகின்ற நேரத்தைக் கணக்கிட்டால் மறுநாளும் அதன் பிறகும் அதே நேரத்தில் துல்லியமாகவும் கூவும் சக்தியுடையது என்பதையும் இன்றைய அறிவியல் உலகம் ஒப்புக் கொள்கிறது. இதனையே சமயவாதிகள் கோழி கூவுகிற நேரத்தில் எழுந்து அப்பொழுது தோன்றுகின்ற அதாவது பூமியிலிருந்து வெளிப்படுகிற வாசனையை நுகர்ந்து காலைக் கடன்களைச் செய்யும்படியாகச் சேவல் கூவுகிறது என்பதைத் தத்துவமுறையில் விளக்கியுள்ளனர்.

சூரபன்மன் முருகப் பெருமான் விட்டகணைகளை யெல்லாம் அறுத்ததுடன் தேரில் கட்டிய கொடியையும் அறுத்து வீழ்த்தினுன். அப்போது அக்கினி தேவன் முருகப் பெருமானின் தேரில் கொடியின்மையையுணர்ந்து தானே கோழிக் கொடியாக அமர்ந்து அண்டங்கள் வெடிக்க ஆர்த்தனன் என்பதை,

ஏவலோடும் எரிதழல் பண்ணவன்
வாவுகுக்குடம் மாண் கொடியாகியே
தேவதேவன் திருநெடுஞ் தேர்மிசை
மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட.

என்று கந்தபுராணம் கூறுகிறது. பிறகு சூரபன்மன் போரில் எதிர்நிற்க ஆற்ருது மயிலும் சேவலுமாக நின்ற போது முருகப் பெருமான் அச்சேவலை அக்கினி தேவனுக்குப் பதிலாக நிரந்தரக் கொடியாகக் கொண்டார். மாறிவரும்,

சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே''

என்று கந்தர்கலி வெண்பாவும் கூறுகிறது.

இப்படி முருகனுடைய மயிலையும் சேவலையும் நினைத்து வழிபாடு செய்வது வழக்கம். கோழியை உயரக் கொண்டிருக்கின்ற வெற்றிப் பாட்டால் கொன்றெடுத்த வீரக் கொடியானது பல்லூழிக் காலம் வாழ்வதாக என்று மகளிர் ஒன்று சேர்ந்து வழிபாடு செய்யும்படியான சோலைகள் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

கோழி ஓங்கிய வென்றடு விறற் கொடி
"வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை,

என்பதாலும் பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ என்பதனுலும் மாண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர' என்பதனுலும் உணரலாம். இதனையே அருண கிரியாரும் திருப்புகழ் மூலம் 'வேலும் மயிலும் நினைந்தவர் தந்துயர் தீர அருள் தருகந்த' என்று வயலூரில் வாழ்த்தி யுள்ளார். எனவே முருகபக்தர்களாகிய நாம் சேவலைக் காணும் பொழுதெல்லாம் முருகனுடைய நினைவு வரப் பெற்று முருகா! முருகா!! என்று வழிபடுவோமாக.

பாடும் பணியே பணியா அருள்வாய் !

மயில் விந்தாகவும் வேல் கலையாகவும் சேவல் நாத மாகவும் உள்ளன என்பதும் இவைகட்குத் தலைவன் முருகன் என்பதும் எனவே இவற்றையே பாடும் பணி யாகக் கொள்ள அருள் செய்ய வேண்டும் என்பதும் தெளிவு. 'நாத விந்து கலாதி நமோநம' என்று திருப் புகழும் வலியுறுத்துகிறது. வணங்க தலையளித்தனை வாழ்த்த நாத்தந்தனை, இணங்க உன் திருக்கூட்டமும் காட்டினுய்; எனவே இனிப்பெறும் பேறு என்னை என்றும்; முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக் கை தொழுது பரவிகாலுற வணங்கி என்றும்; அளப்பில் கீதம் சொன்ஞர்க்கு அடிகள்தாம் அருளுமாறே என்றும்; ஓங் காரத்துள் ஒளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு தூங் காது தொழும்பு செய்ய வேண்டும் என்றும்; ஊனடைந்த உடம்பின் பிறவியானது தானடைந்த உறுதியைச் சார வேண்டுமானுல் தேனடைந்த மலர்ப் பொழில் தில்லையுள் மாநடஞ்செய்வரதர் பொற்ருள் தொழவேண்டும் என்றும் அடியவர்கள் அருளிய அருளுரைகட்கு ஏற்றவாறு கருணைக் கிருப் பிடமான மயிலையும் ஞானபீடமாக இருக்கின்ற வேலையும் அழகிய சேவலையும் பாடும் பணியையே நாம் பணியாகக் கொண்டால் முத்தியைப் பெறலாம்.

தேடும் கயமாமுகனைச் செருவில் சாடும்தனியானை :-

வசிட்டர் மரபில் தோன்றிய மாகதர் என்னும் முனிபுங்கவரும் விபுதை என்னும் அசுரகன்னியும் சேர்தலால் பிறந்த யானை முகத்தையுடைய கயமுகன் என்கிற அசுரன் ஆயிரமாண்டுகள் இலை தழைகளைத் தின்றும் ஆயிரமாண்டுகள் நீரைமட்டும் குடித்தும் ஆயிரம் ஆண்டுகள் காற்றைமட்டும் சுவாசித்தும் பிராணவாயுவை எழுப்பி மூலத் தீயை வளர்த்து விந்து தானத்திலுள்ள அமுதைப் பருகியும் இறுதியாகப் பதினாயிரமாண்டுகள் பஞ்சாக்கினியின் நடுவே நின்றும் தவம்செய்து சிவபெருமானிடம் சாகாவரம் பெற்றான். வரத்தின் வலிமையால் இந்திரன் முதலிய தேவர்களைத் தினமும் தோப்புக்கரணம் இட்டுப் பணிவிடை செய்யும்படி செய்தான். பிரமன் முதலியோர் சிவனிடம் முறையிட்டனர். சிவபெருமான் உமாதேவியுடன் ஓவிய மண்டபத்திற்குள் சென்றபோது நடுவேநின்ற பிரணவ எழுத்து கடைக்கண் நோக்கம் பெற்றது. அப்பிரணவம் களிறாகவும் பிடியாகவும் இரு கூறாய்ப்பிரிந்து செய்த கலவியால் ஐந்து திருக்கைகளையும் மூன்று திருக்கண்களையும் தொங்குகின்ற வாயையும் திங்களையணிந்த சடையினையும் மும்மதங்களையுமுடைய கரிய யானை முகவிநாயகர் தோன்றினார்.

அக்கணத் தாயிடை ஐங்கரத்தவன் அருள்
முக்கண் நால்வாயினன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத்தவன் மதிச்
செக்கர் வார் சடையன் ஓர்சிறுவன் வந்தருளினான்,

என்பது கந்தபுராணம். சிவபெருமானருளால் விநாயகர் தனது பூதகணங்களுடன் அசலனைவாகனமாகக் கொண்டு கயமுகனிடம் போர் செய்த போது எம்முறையிலும் அவன் சாகாமையைச் சிவனதருளால் உணர்ந்து தனது கொம்பு

களில் ஒன்றை முறித்து கயமுகன் மேல் எறிந்தார். கொம்பு அவன் உடலைக் கிழித்து வீழ்த்திப் பிள்ளையாரிடமே வந்தும் அவன் மீண்டும் உயிர் பெற்றுப் பெருச்சாளியாக எதிர்த்தான். முனிவர்களின் பார்வையால் இரும்பும் பொன்னாக மாறுவது போல் வலிமைகுறைந்த கயமுகன் பிள்ளையாருக்கு வாகனமாக அமர்ந்தான். திருமால் முதலிய தேவர்கள் கயமுகனுக்கிட்ட தோப்புக்கரணத்தை விநாயகருக்கு இட்டு வழிபட்டு வருவாராயினர். இதுவே கயமுகன் மடிந்த வரலாறாகும்,

இனி தேடும் கயமாமுகனைச் செருவில்சாடும் என்பதைச் சகோதரனுக்கு அடைமொழியாக்கி, சூரபன்மன் எடுத்தபல மாயவடிவங்களில் யானைவடிவமும் ஒன்று என்றும் அதனைச் சாடிக் கொன்றவர் முருகன் என்றும் பொருள் கொள்வர்.

ஓங்கார வடிவமாகிய பிரணவமே விநாயகராக அவதரித்தது என்பதைப் புலப்படுத்தவும், எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் எந்த வடிவத்திலும் பிள்ளையாரை வழிப்பட்டேயாக வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும், உலகத்தைச் சுற்றி வருபவர்க்கே மாங்கனி உரியது என்ற போது உமையொருபாகனை வலம்வந்து உலகமே அவர்களுள் அடக்கம் என்பதை விநாயகர் தெரிவித்தும் சிறப்பு பெற்றமையைத் தனியானை என்ற அடைமொழியால் புலப்படுத்தியுள்ளார். சகோதரனே — சகோதரன் என்பதற்கு உடன் பிறந்தவன் என்பது பொருளாகும் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக ஆண்டுவந்த சூரபன்மன் தேவர்களை இழிவுபடுத்தாமல் இருந்திருந்தால் இன்னும் எத்தனையோ யுகங்கள் ஆட்சி செய்து வரலாம். ஊழ் என்ற ஒன்று நெருங்கிய போதும் ஆறுமுகம் தோன்றி ஒரு முகத்தாலன்றி ஆறுமுகத்தால்

அறிவுரை கூறியபோதும் ஏற்காமல் சூரபன்மனே தாரகன், சிங்கமுகன், பானுகோபன், அக்னிமுகன் தருமகோபன் முதலிய வடிவங்களில் தோன்றி சண்டையிட்ட போது; கயமுகனை வென்ற விநாயகப் பெருமானின் பின் பிறந்தவராகிய முருகப்பெருமானின் ஆற்றல்மட்டும் இனைத்தாவிடும் என்பதை அறிவிக்கும் முகத்தால் பெயர் குறிப்பிடாமல் சகோதரனே என்ற அருணகிரிநாதப் பெருமானின் சொல்லாட்சியைப் புகழ்வதற்குச் சொல்ஏது?

யானைமுகத்துடன் போரிட்ட கயமாமுகனை விநாயகர் வென்றது போல் பலமாய வடிவங்களை யெடுத்த சூரபன்மனை வென்றதும் ஆறுமுகப்பெருமானின் அருள் விளையாட்டேயாகும்.

ஞானிகளுடைய உள்ளத்தில் ஓங்கார வடிவமாகவும், தவசிகள் உள்ளத்தில் சுப்ரமணியமாகவும், பக்தர்களின் உள்ளத்தில் முருகனும் கார்த்திகைப் பெண்களுக்குக் கார்த்திகேயனாகவும் பாலர்களின் உள்ளத்தில் பால முருகனாகவும் ஆடுகின்றவன் குகனே என்பதையும் அப் பெருமானைப் பாடும் பணியையே பணியாகக் கொள்ள வேண்டும் என்பதையும் அருணகிரிநாதப் பெருமான் அழகுற அருளியுள்ளார்.

---

சிவ சிவ]

4̶9̶8̶ 4̶9̶6̶.

# இது சரியா?

திருமதி உமாதேவி பத்மநாபன் அவர்கள்
9/37 திரௌபதி அம்மன் கோயில்
அரியாங்குப்பம்
புதுவை—7 605007.

பகுத்தறிவு வாதிகள் இன்று தோளுயர்த்தி, மார் தட்டிப் பேசுகின்றனர், சமுதாயம் முன்னேறி விட்டது. மக்கள் வாழ்வு உயர்ந்து விட்டது. இந்தியா சகல துறைகளிலும் முன்னேறி விட்டது. கலையா? அறிவியலா? மருத்துவமா? வானசாத்திரமா? சமத்துவமா? ஆகா! எதிலுமே நம் நாடு பின்தங்காமல் முன்னேறி விட்டது என்று மேடைகட்டி கூட்டம் கூட்டி தொண்டை வரள, கேட்பவர்கள் காதுப்பறை கிழிந்து செவிடாகும்படி நீட்டி முழக்குகின்றார்கள். சரி! இவர்கள் முழக்கப்படியே நாடு முன்னேறி விட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து விட்டது என்றால், எதில் முன்னேறி விட்டது? தரம் எவ்வளவு தூரம் உயர்ந்துள்ளது? என்றால் இந்த வினாக்களுக்கு விடையளிப்போரைத்தான் காணோம். ஏதோசிலர் எதையோ சமாதானமாகக் கூறினாலோ உண்மையுள்ள மனம் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றது மறுத்துரைக்கின்றது. சாண் ஏறினால் முழம் சறுக்கும் போது, இந்த ஆர்ப்பாட்ட முழக்கங்கள் ஒரு கேடா? என்றுதான் கேட்கின்றது.

இந்தியா பண்புக்கும், கலாசாரத்துக்கும், குறிப்பாக ஆன்மீகத்துக்கும் பெயர் பெற்றது, புகழமைந்தது. ஒளி

விளக்காய்த் திகழ்ந்தது. இன்றல்ல, பன்னெடுங் காலத்துக்கு முன், மக்கள் "அன்பே சிவம்" என்றுணர்ந்தவர்களாய் அந்த அன்பும், பண்பும், அறிவும், பணிவும் கொண்டு சமயக் காழ்ப்பின்றி இறைவனை வணங்கி, அடியார்களையும், பிறசமய அடிகளாரையும் போற்றி மதித்துக் காத்து, ஐம்பெருங் குரவர்களை மதித்து நடந்தார்களே அன்று இருந்தது, நாளுக்கு நாள் வளர்பிறை போல் வளர்ந்து பூரண நிலவாய்த், தண்ணொளி வீசித் திகழ்ந்தது. ஆனால் இன்று? ஆன்மீகத்துறை சகல ஆபரணங்களையும் இழந்து, கந்தலாடையுடுத்தி சிலமதச் சான்றோர்கள், பெரியோர்களின் அரும்பெரும் முயற்சியால், அயராத உழைப்பால், உயிரைக் கண்களில் தாங்கி நடக்கவும் சக்தியற்ற ஏழைத்தாயாக நிற்கிறது.

இந்நிலை ஏன் வந்தது? யாரால் வந்தது? இது ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டு, தாமே உண்மையான விடையை உணர்ந்து தெளிய வேண்டும். அப்போது உண்மைதெரியவரும். உள்ளன்போடு, நிர்மலமான மனதோடு இறைவனை வழிபட்டு வணங்காமையும், இறைவனிடம் உண்மையிலேயே அன்பு கொண்ட அடியவர்களைப் போற்றி மதிக்காமையும் காரணம். பணத்தை ஏராளமாகச் செலவு செய்தால் மட்டும் போதாது. கோயில், குளம்-கட்டுவித்தால் போதாது. மனம் இறைவனிடம் ஒன்றியிருக்க வேண்டும்.

கையொன்று செய்ய விழியொன்றுநாட கருத்தொன்றெண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே!,

என்று பட்டினத்தடிகள் இறைவனிடம் வினவுகின்றார். அப்படிச் செய்யும் பூசையால் எந்தப் பலனுமில்லை. திரிகரண சுத்தியுடன் உண்மையான பக்தியுடன் செய்யும் பூசை எப்படிப்பட்டதாயினும், எத்தன்மையுடையதாயினும் இறைவன் அவற்றை ஏற்கவே செய்கின்றான். இதனைக் கண்ணப்பர் வரலாற்றால் நன்கு அறியலாம். திண்ணனார் உதித்தது வேடர் குலமாதலால் அவர் தம் குலத்துக்குரிய தொழிலையே மேற்கொண்டார். அத்தொலிழின் மூலம், தம்குல மரபினரேற்ற உணவினையே இறைவனுக்கும் திருவமுது செய்வித்தார். இறைவனும் அவற்றை மிக்க உவப்புடன் ஏற்றுக் கொண்டார்.

"............................ வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்த பொற் செருப்பால் மாற்றி வாயில்மஞ்சன நீர் தன்னை
விளைத்தவன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்
தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்காளத்தி
மலைமிசைத் தம்பி ரானார் முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்தகல்லை
இலைமிசைப் படைத்த வூனின் திருவமுதெதிரே வைத்து"

இறைவனை உண்ணுமாறு வேண்டுகின்றார். பார்க்கப் போனால் கண்ணப்பரின் செயல் அநாசாரமானதாகவும், அருவருப்பூட்டுவதாகவும் அமையும். குலமோ தாழ்ந்த குலம், திருவமுதோ வாயிலிட்டு சுவை பார்த்த எச்சில் உணவு. அதுவும் அது பன்றியிறைச்சி வேறு. திருமஞ்சன நீர் வாயிலிருந்த எச்சில் கலந்த நீர். நிர்மால்ய மாட்டியதோ வாயிலிருந்த... மலர்களைத் தள்ளியதோ செருப்பால், இறைவனுக்குக்

கொண்டு வந்த பள்ளித் தாமமோ தலையில் சூடிக் கொண்டு வந்த மலர்கள். ஆக எல்லாமே தம்முடைய பரிசுத்தத்தை இழந்திருக்கும் போது இறைவன் அவற்றை எப்படி ஏற்ருர்? என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. மேலும் மகா காவியமான இராமா யணத்தில், இராமனை வேட்டுவக் குகன் காணவரும் போது மீனும், தேனும் காணிக்கையாகக் கொணர்ந்து வைக்கின்ருன். இராமன் அவற்றைத் தொட்டு ஏற்றதாகச் சொல்கின்ருனேயன்றி உண்டதாகக் கூறப்படவில்லை. மீன் ஆழத்தில் இருப்பது, தேன் உயரத்தில் இருப்பது, குகன் தான் இராமனிடம் கொண்டுள்ள அன்பு, பக்தி, விசு வாசம் இவற்றின் ஆழத்தையும் உயர்வையும் குறிக்குமுக மாகவே அவற்றைக் கொணர்கின்ருன். அதனை இராமன் தெளிவாக உணர்ந்து இருந்தும், ஏற்ருனே தவிரத் தன் குலமரபுக்கேற்ப உண்ணவில்லை. ஆனுல் ஒப்பற்றப் பரம் பொருளான சிவபெருமானே கண்ணப்பரின் வழிபாட்டை ஏற்றுக் கொள்வதன் மூலம் தம்முடைய எளிமையை மற்றவர்களுக்கு உணர்த்தி விடுகின்ருர்.

கண்ணப்பர் ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் தன்மாத்திரைகள், பிராணன்கள், அந்தகரணங்கள், இவைகளில் பரிசுத்தமுள்ளவராக இருந்தபடியால் இருபத் தைந்தாவது தத்துவமான ஜீவாத்மா, இருபத்தாருவது தத்துவமான பரம்பொருளைக் கண்டவுடன் அதனுள் கலந்து கொண்டது. இரண்டும் கலந்ததனுல் கண்ணப்பர் செய்ததெல்லாம் பரம்பொருளின் இசைவானதாண்டுதலா

லேயன்றி வேறல்ல. அதனால் அவருடைய வழிபாடு களங்கமற்ற புனிதமான வழிபாடாயிற்று. திருமால் கோவில்களில் நடத்தப்படும் "நம்மாழ்வார் சாற்றுமுறை" இந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதே என்று பெரியோர்கள் சொல்லுவர். ஆனால் பலருக்கு இதன் பொருள் தெரியாது. இருபத்துநான்கு தத்துவங்களையும் கடந்து, தன்னுள்ளிருக்கும் ஜீவாத்மாவின் நிலையுணர்ந்து ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றெனத் தெளிந்து, பரமாத்மாவுடன், ஜீவாத்மா கலக்க வேண்டும். கலப்பதற்கான வழிவகைகளையும், முயற்சிகளையும் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் ஏற்படுத்தப்பட்டதே நம்மாழ்வார் சாற்றுமுறை. ஆனால் அதைப் பார்ப்பவர்களில் நூற்றில் தொண்ணூற்றைந்து பேருக்கு அதன் பொருள் தெரியாதென்று மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம். ஏனெனில் நம் நாடுதான் மிக, மிக முன்னேறியுள்ள(!) நாடாயிற்றே.



# ஜோதிடமும் அதன் கணித தத்துவத்தில் நாமும் (2)

திரு, இராம. குமாரசுவாமி அவர்கள்,
(தலைவர்) சைவ பிரகாச வித்தியாசாலை,
உடன்குடி
(நெல்லை மாவட்டம்)

## மரணமிலாப் பெருவாழ்வைக் காண வாரீர்!

இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ! என்பதுவே, முன்னவர்களின் முறையீடுகள்.

இதனுல் என்ன விளங்குகிறதென்ருல், முன் பிறவியும், அப்பால் பின் பிறவியும் தொடர்ந்து கொண்டேயிருக்குமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

இதற்கு அடையாளம் என்னவென்ருல் மனித இனத்தில் பலர், பலவித அமைப்பில், நல்லவர்களாகவும், கெட்டவர்களாகவும், தோன்றியுள்ளார்கள். இதில் கருணையுள்ளவர்களாகவும், கருணையற்றர்வகளாகவும், மனிதர்களாகவும், மனிதத் தன்மையை இழந்தவர்களாகவும், செல்வந்தர்களாகவும், செல்வமற்றவர்களாகவும், மக்கள் செல்வமுடையவர்களாகவும், மக்கள் செல்வமே இல்லாதவர்களாகவும், பலவித குணங்களுடன் தோன்றி மறைகிருர்கள். என்ன காரணமென்பதை இங்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவோம். இந்த ஜென்மாவில்,

(1) கருணையே இல்லாதவர்கள் தெய்வ பக்தியும், அறவே இல்லாதவர்கள், மனித உள்ளமும், அறவே இல்லாத முறடர்களாக இருக்கப்பட்டவர்களிடத்தில் ஏராளமான பொருட் செல்வமும், மக்கள் செல்வமும், பல அதிகாரமும், வசதியும் படைத்தவர்களாகவே இருக்கிறார்களே.

(2) 2-வது மற்றொரு சாரார் கருணையுள்ளவர்களாகவும், மனிதத் தன்மையில் வாழ்ந்து வருபவர்களாகவும், தன்னலங் கருதாது பிறர்நலம் பேணி, வருபவர்களாகவும், இருக்கும் இவர்களின் நிலை என்ன?

மக்கள் செல்வமில்லை, பொருட் செல்வமில்லை. மற்றுமுள்ள ஏனைய செல்வங்கள் ஏதுமில்லையே என்ன காரணம்!

முதலாவது சொல்லப்பட்ட மனிதத் தன்மையே அறவே இல்லாதவர்கள், முன்ஜென்மாவில், நல்லவர்களாகவே, வாழ்ந்து கருணையுடன் வாழ்ந்தவர்கள்.

ஆனதால் இந்த ஜென்மாவில், எல்லா செல்வங்களும், நிறையப் பெற்று வாழ்கிறார்கள் என்பதையே முடிவு செய்ய வேண்டும்.

2-வது சொல்லப்பட்டிருக்கிற மனிதத் தன்மையுள்ள, கருணையாளர்கள், எல்லா வகைகளிலும், மேம்பட்டவர்களாக இருந்தாலும்,

முன் பிறவியில் நல்லவர்களாக வாழவில்லை. கருணையற்றவர்களாகவும், தெய்வ பக்தியற்றவர்களாகவும், வாழ்ந்து வந்திருப்பதால், இப்பிறவியில் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அறியக் கிடக்கிறது:

இந்த நிலையில், முன் பிறவி, பின் பிறவி சங்கிலித் தொடர்பு போல் வாழையடி வாழையாக தோன்றி மறைகிறது.

இந்த இத்தருண வேளையில் தீர்க்க தரிசமான முறையில், சிந்தனை சக்தியுடன் மனிதர்களாக வாழ்ந்து வரக்கூடிய நல்ல சந்தர்ப்பத்தை திருவருள் நமக்கு வழங்கியுள்ளதை, தவறவிடாமல், பயன்படுத்துவோமாக!

இம்மண்ணில் தோன்றிய யாரும், சிரஞ்சீவியல்ல என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறோம். அழியும் உடலை விட்டு வெளியேறிய, உயிரணு ஒளி, வாழ்ந்தும், வளர்ந்தும் வருகிறதென்பதும், ஒரு கணித உண்மையுங் கூட,

அதிலும் ஒவ்வொருவரும் பிறக்கும் முன்னரே, தீர்ப்பாகி தயாராக இருக்கிறபடியேதான் குழந்தைகள் தோன்றுகிறது மறையவும் செய்கிறது.

இதற்கு சான்று முன்னவர்கள் எழுதி வைத்த ஓலைச் சுவடிகளே! நாடி என்றும் சொல்வதுண்டு.

குழந்தை பிறப்பதும், இறப்பதும், முன்னவன் யெழுதி வைத்த ஓலைச் சுவடியின் படியேதான், எல்லா நன்மை தீமைகளும், நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த ஓலைச் சுவடி உண்மையை அதன் தெளிவை, யாரும் கண்டு உறுதி செய்யலாம்.

பெற்றோர்களின் எண்ணத்தால் அவர்களின் முயற்சியால், எதுவும் அதாவது குழந்தைகளுக்கு, ஆண்கள், பெண்களுக்கு பெயரிடுவதும், ஆண் குழந்தை வேண்டும், பெண் குழந்தை வேண்டும், என்று பெற்றோர்களால் நிர்ணயம் செய்யவும் முடியாது. எல்லாமே

அங்கு நூறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே யெழுதி வைத்தபடியேதான், எல்லா பிறவிகளும் நடந்து கொண்டிருக்கிறது. என்பதை ஓலைச் சுவடி மூலம் நமக்கு தெளிவு தருகிறது. ஒவ்வொருவரின் பெருவிரல் கைரேகை மூலம் எழுதப்பட்டு விட்டது. யாரும் இவை களை மறுத்துவிட முடியாது.

மேலும் நமது தமிழகத்தில்தான் நம் முன்னோர்கள், இம்மாதிரி உயிருள்ள உண்மையுள்ள வரலாறுகளை, ஞான வடிவில் கண்டு நமக்கு தந்திருக்கிருர்கள், வேறு எந்த மொழியிலோ, தேசத்திலோ, இம்மாதிரி ரேகையும் சரித்திர வரலாறுகளை தெளிவாக உற்பத்தி செய்ததாக காணேம். இவ்வித விளக்கத்துடன்,

ஆனதால் தமிழ் நாட்டவர்கள் யாராக இருப்பினும், பிறப்பு முதல் இறப்பு வரை கை பெருவிரலின் ஒரு இஞ்சுக்குள் அமைந்திருக்கும் இப்பேர் உண்மைகளை தெரியாமலிருப்பது நம் கருணையுள்ள மூதாதைகளுக்கு நன்றிக்கடன் செலுத்துபவர்களாக ஆகவும் மாட்டோம் என்பது மட்டுமல்ல! நாமும் நம் உயரிய மனிதப் பிறவி யின் பயனை அடையவும், உய்யவும் முடியாதே! அதுமட்டுமல்ல. கடவுள் ஏது? சாத்திரம் ஏது? எல்லாம் பொய்யே! என்று எதையுமதியாமல், பெரியோர்களையும் மதியாமல் அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கும் அன்ன வர்களுக்கும், இந்த கைரேகை சாட்சியாக நின்று உறுதி யுடன் அவர்கள் யாராகயிருந்தாலும், அவர்களை திசை திருப்பி, நல்வழிப்படுத்தும் ஓர் உண்மையே! அத்துடன் நம் தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும்—ஆலயமும் அத்தத்துவத்தில் ஒன்று.

எப்படி நம் உடலிலுள்ள கருவிகளனைத்தையுமே, தன்முன் கண்டு கொண்ட பெரியோர்கள்தான், நம்

உடலின் உள்ளுறுப்புகளை அப்படியே ஆலயத்தில் அமைத்திருக்கிறார்கள். வெளிப்படையாக! இதன் கருத்து, இவ்வாலய வழிபாடு எதுவரையும்? நம் முன்னோர்கள் தன் உருவத்தை தன்முன் கண்டனுபவித்த மாதிரி, அவர்கள் வாரிசுதார்களாகிய நாமும் கண்டனுபவிக்க வேண்டியே, ஆலயத்தை ஏற்படுத்தி வழிபாடும் அதற்கு வேண்டும், ஆஸ்திகளும், நிரம்ப ஏற்படுத்தியுள்ளார்கள் கருணையுடன்!

இந்த நிலையில் நாமும் நம்மிலிருக்கும் உடல் உட் பொருளை கண்ணாரக் கண்முன் கண்டு கொள்ள வேண்டும். தவிரவும், ஆலய வழிபாடும் எதுவரையுமென் பதற்கும் கால நிர்ணயம் உண்டு.

எப்படி எதுபோல் என்றால் பள்ளியில் மாணவன் படிக்கிறான். எதுவரையும் படிக்க வேண்டுமென்ற கால வரை உண்டுமே!

அதாவது உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவன் அப்படிப்பு முடிவுற்றதும், அதைவிட்டு வெளியேறுவது போலதான், ஆலய வழிபாடு என்பதும், ஆலயம் என்றால் என்ன என்பதையும், தெரிந்து கண்டு கொண்ட பின்னர், அந்த ரகசியம் அமைப்பு எங்குள்ளது? யாரிட மிருந்தது எடுத்து உண்டு பண்ணப்பட்டது. என்பதை தெரியும் வரை ஆலய வழிபாடு செய்ய வேண்டியதே! மறுக்க முடியா ஒன்றே.

சரி, அவ்வுண்மையைத் தெரிய முடியாமற் போனால் சாகும் வரை ஆலய வழிபாட்டையாவது, செய்து கொண் டிருக்க வேண்டியவர்கள்தான்! வேறு வழி இவர்களுக்கு

கிடையாதே! ஆலயம் எங்குள்ளது? எப்படிப்பட்ட தென்பது என்ற உண்மையைக் கண்டவர்கள்தான் முன் சொன்ன சான்றுகள் மாதிரி மரணமிலாப் பெருவாழ்வை அடைந்துய்யவும் முடியும், என்பதுதான் இதன் பொருள்! இது திட்டவட்டமான உறுதியான செய்தியே! சிந்திக்க வேண்டப்படுகிறதே! மேலும் நாமேதான் ஆலயம். ஆலயமேதான் நாம். நாம் கண்டனுபவிக்கவே பெரியோர்கள் கருணையுடன் ஆலயங்களை இந்த நாட்டில் தமிழ் மகனல் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. விரிக்கில் பெருகும்.

சரி மேலும், ஒரு விளக்கம் தரப்படுகிறது மனிதன் உடலிலிருந்தேதான் ஆலயம், எழுப்பியுள்ளது. கோபுரமும், கொடிமரம் வரை பிரகாரம், உள்ளிருக்கும் மூலகூர், பரிவாரங்கள் அனைத்துமே.

இது ஒரு தேசத்தவர்க்கா? ஒரு மொழிக்கா? ஒரு மதத்திற்கா? ஒரு இனத்திற்கா? ஒரு வேதத்திற்கா? இல்லையே! மனித உலகத்திற்கே! இது சொந்தமல்லவா? அவ்விதம் உடலிலுள்ள உட்பொருளைக் கண்ட மெஞ்ஞானிகள், ஆலயத்தையும் எழுப்பி, அதன் உண்மை வரலாறுகளை அப்படியே, கவிவடிவமாகப்பாடியருளியிருக்கிறார்களே! அதன் கருத்து எப்படி பரவியிருக்கிறது! இப்பொழுது குறுகிய மனப்பான்மையிலேயே பள்ளி படிப்புகளை வைத்தே அதற்கு பொருள் தரப்படுகிறது. இவ்வளவு முன்னேற்றமான இவ்விருபதாம் நூற்றாண்டிலுமா! இக்குறுகிய கருத்தை ஒரு மதத்திற்கு மட்டும் பயன்படுத்துவது நம் முன்னோர்களின் கருத்து அதுவல்லவே! மனித சமுதாயத்திற்கே ஆலயமும் அதன் வேத சுருதிகளின் கருத்துக்களும்,

உண்மையிலே பெரியவர்கள் பாடியதென்று வாய் குளிர நம்மவர்கள் சொல்வதில் பின் வாங்குவதில்லே. அப்படிப்பட்டவர்களிடத்தில் பெரியவர்கள் பாடிய கருத்தைக் கேட்டால், நம் மதத்திற்கும், நம்மினத்திற்கும், நம் மொழிக்குமே தான் அவர்களால் தரமுடிகிறது. காரணம் அவர்கள் தன்னே, தன்முன் காணுதவர் களென்ருல், மிகையாகாதே.

உண்மையிலேயே பெரியவர்கள் கருணேயாளர்கள், ஞானிகள் பாடியதென்ருல் எல்லா மனிதச் சமுதாயமும், எல்லா தேசத்தவர்களும், எல்லா மதத்தினர்களும், ஒப்புக் கொள்ளக் கூடிய கருத்தைத் தான் சொல்லவேண்டும். அப்படித் தான் அதன் பொருளும் அடக்கமாக புதை பொருளாகப் பாடி, அருளியிருக்கிருர்கள். இதில் எந்தவித சந்தேகமோ, மறுப்போ கிடையாது. அது மட்டுமல்ல. கல் கட்டிடமான ஆலயத்தில் அன்ருடம் செய்து வருகின்ற அத்தனே மரியாதைகளும், அதாவது பாலா பிஷேகம் எண்ணே தைல அபிஷேகம், சந்தண அபிஷேகம் விபூதி அபிஷேகம், தண்ணீர் அபிஷேகம், அலங்காரம் நைவேத்தியம் எல்லாமே நமக்காகவே நடக்கிறது. நம் உடலுக்கு இவ்வளவு மரியாதையும் செய்யவேண்டு மென்பதற்குப் பதிலாகவே அங்கு நடத்தப்படுகிறது. இவ்வுண்மையையும், நம்மில் அனேகர் அறியவும், தெரியவும், முடியாமல் இருக்கிருர்களே! ஐயகோ! அது மட்டுமல்ல இம்மரியாதைகளனேத்தும் மேலுலகத்திற்கு செல்கிறது.

இந்த நிலேயில் நம்மை நாம் உணருகிற வரையும் ஆலய வழிபாடும், மரியாதையும், செய்யவே கடமைப் பட்டிருக்கிருேம்.

ஆனால் நாம் தான் ஆலயம், நம்மிலிருந்தே தான் நமக்காக நம்மவர்கள் தோற்றுவித்திருக்கிருர்கள். என்பதை நாம் தெரிந்துக் கொள்ளவும் அதன்படி நடக்கவும், மற்றவர்களுக்கு அவைகளை எடுத்துரைக்கவும் நாமனைவரும் கடமை உள்ளவர்களாகவும் ஆவோமாக!.

பொதுவாக வழிகாட்டியல்லாது, ஊர்வழி போக முடியாதே! அதே போல குருவழி நடக்கவும், வேண்டும். அவ்விதம் குருவை தேடவும் வேண்டும்.

அப்படி குரு கிடைத்துவிட்டால், அக்குருநாதனை பற்றிப் பிடித்து அவர்வழி காணவும், வேண்டும். எது போல, குரங்கு தன் குழந்தையைப் பற்றி உள்ளத்தில் கருணையிருந்தாலும், அதன் குட்டி எப்படி தன் தாயைப் பற்றி இறுகப் பிடித்துக் கொள்கிறேதோ! அதே மாதிரி, குருவை சீடன்தான் பற்றிப் பிடிக்கவேண்டும். அப்படியானல் தான் குரு தன்சீடனை பாதுகாக்கவும், கருணை பாலிக்கவும், ஏதுவாகும், இதுவும் எதுபோல.

பூனை தன் குட்டியை, தன்குட்டிதன் பலம் வரும் வரை எப்படி தன் வாயால் கௌவி. கௌவி, பாதுகாத்துக்கொள்கிறதோ, அதே மாதிரி.

அதுபோல குருவும், தன்சீடனை, பாதுகாப்பதும் உண்மை! ஆனதால்,

குரங்கு, குட்டியும், பூனைக்குட்டியும், இதற்கு சான்றுகளாகும். சிந்தனைக்குறியது. இல்லறமல்லது நல்லறமன்று, என்று சொன்னது, எந்த நிலையில் என்பதையும், நம் மூதாதைகளின் வழியையும், அவர்களின் இறுதியான முடிவையும் இங்கு கொணருவோம்.

நாஊ என்பது நம்மதல்ல. அது சிரஞ்சீவியுமல்ல என்றிருப்பதால், உண்மையை வெளியிட வேண்டியதே என்ற முடிவு வந்திருக்கிறது.

செவி மட்டும் தருக. செயல் பெறுவது வேறு, இது வரை கீழே தரும் உண்மையை அதன் செயலே யாரும் செய்ததாக வரலாரைக் காணமுடியவில்லேயே!

இருந்தாலும், மேலும், அடக்கமாக மறைத்து வைத்திருப்பதில், யாருக்கும் பயனில்லே. என்பதால் பொக்கிஷம் வெளிக் கொணரப்படுகிறது.

இல்லறமென்ற குடும்பம் செயல் பெற்றதால் தான் நாம் தோன்றியுள்ளோம்! இதை யாரும் நம்மில் மறுப்ப தற்கில்லே! இயற்கையாகவே முன் சொன்னது போல் ஒருவனும், ஒருத்தியும், சேர்ந்து ஆதி மகவைப் பெற வில்லே. யோனிவாயில் அல்லாமல் தான் தானுகவே தோன்றி இருக்கிறது. முதன் முதலில் தோன்றியது ஆணு, பெண்ணு, என்பதை இதுவரை நம் பெரியவர்கள் சொல்லவில்லே. அதனுல் வேதங்களிலும், சொல்லப்பட வில்லே. இதைசந்தேகமற நம் கபிலமா முனிவர் ஆண் முதிதோ!, பெண் முதிதோ, என்று சொல்லிவிட்டார். உண்மைதான்.

இவ்வகையில் எப்படியோ ஆணும், பெண்ணும், ஒருவர்க்கொருவர் சம்பந்தா, சம்பந்தாமில்லாமல் தனித் தனியாக நம்மில் தோன்றியுள்ளவர்கள். அதன் பின்னர் தான் இரு சாரரர்களும், சந்திக்கும் வாய்ப்பில் இயற்கை

யாகவே பற்றுப் பாசமேற்பட்டு, உடலுறவு ஏற்பட்டதின் பேரில் மக்களை பெறுகிருர்கள். வாழையடிவாழையாகவே பெருகிக் கொண்டக் காரணத்தால் தான் கலியுகம் என்ற சொல்லும் பிறந்திருக்கிறது. கலியுகம் என்ருல், கலிக்கிறது, கலியுகம் என்றும், முன்னும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி ஏற்பட்ட நிலையில் மனிதன் எந்த முறையில் நடக்க வேண்டும் என்பதற்கு விளக்கம் தரப்படுகிறது. உடலுறவால் ஒரு மகவைப் பெற்றெடுத்ததும், தாய், தகப்பன் என்ற சொல் பிறக்கிறது. மகவைப் பெறுவதற்கு முன் இவர்களுக்கு தாய் என்ற சொல்லோ, தகப்பன் என்ற சொல்லோ, பிறப்பதில்லையல்லவா?.

எப்பொழுது ஒரு மகவை இருவரும் பெற்றதுமே,! தங்களின் பிறவிக்கடன் தீர்ந்துவிட்டது. ஒரு மகவுக்கு மேலாக தோற்றுவிக்கப் படுவது அர்த்தமற்ற செயல் என்றே! அனுபவமுள்ள பெரியோர்களின் திட்டவட்டமான உறுதியுள்ள, கண்டிப்பான எச்சரிக்கையும் கூட.

ஊழின் படியே தான் நடக்கும். என்று சொல்ல இடமளிக்கிறது. ஆனுல், விதியிலே அடித்தளக் கோளாறு.

ஆனுல் ஒரே ஒரு மகவு தான்! பெற்ருக வேண்டும். என்பது கோடியில் ஒருவனல்ல! இக் கால எல்கையில் பத்துக் கோடிக்கு ஒரு உத்தமராகயிருக்கலாமென்று தான் இம்மோசமான கலிக்கிற இக்கலியுகத்தில், சொல்ல

முடிகிறது! இதிலும் பிரம்மச்சாரியம் என்று ஒரு மோச மான சொல் இம்மண் உலகில் பரவலாக பேசப்படுகிறது! இதை பூரணமாக ஒப்புக் கொள்ள அறிவு நூல் மறுக்கிறது

காரணம் அவ்வளவு கட்டுப்பாட்டுடன் இருக்கும் நம்மவர்களில் யார் என்பதே வரலாறுகள் மூலம் கேள்வி எழுசிறது.

இம்மாதிரி பிரம்மச்சரியம் என்று சொல்பவர்கள் துறவி என்றும் சொல்பவர்கள் இவ்வுலகையும், அவ் வுலகையும், ஏமாற்றுபவர்களே!

இவர்களை நோக்கி என்ன கேட்கிறது? உணவை உண்பதில் நிர்ணயம் உண்டா? அறு சுவையையும், நீக்கப்பட்டிருக்கிறதா?

மௌனம், சாதிக்கப்படுகிறதா? அடக்கம் ஒடுக்கமாக இருக்கப்படுகிறதா? என்பது மட்டுமல்ல, பிரம்மச்சரியம் என்று சொல்லப்படுவர்கள் தன் ஜென்மாக்கடனை தீர்த்துள்ளார்களா? என்பதே சேள்வி சேள்விக்குதக்க பதில் எங்கும் தரப்படவில்லையே இதுவரை.

எண்ணாயிரத்தாண்டு யோகமிருப்பினும் கண்ணார முதினைக்கண்டறிவாரிங்கில்லை என்று சொன்னால் சரியை கிரியை, யோகம் என்றுள்ள செயல்களைச் செய்வதெல் லாம், முதல்வகுப்புக்கு போவதற்கு முன் பாலர்வகுப்பு எப்படியோ அதுபோல ஒழுங்குபடுத்திக்கொள்வதே,

படித்திக்கொள்வது ஒழுங்குபடுத்துவதற்கும் கால நிர்ணய மில்லாமல் ஆயுள்பரியந்தம் இது தானென்று செய்து கொண்டேவந்தால், எப்படி உணருவது கண்டு உய்வது ஒழுங்குபடுத்திய பூமியில் ஞானவித்தைவிதைக்கவேண்டாமா? விதைத்தால்தானே நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து அப்பயிர் செழிக்கும்,

ஒருகால எல்கைக்குள் சாத்திரத்தின் கட்டளைப்படி சமய ஆச்சார விதிகளின்படி செய்து முடிக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்கவில்லை. நம்முன்னோர்களும் இதைச்செய்துதான் (பாலர் வகுப்பில் ஒழுங்கை கண்ட பின்னர்தான்) கண்ணூரமுதினைக் கண்டு கொண்டார்களென்பதுதான் அனுபவசாத்திரம்.

அதுவும் வசனமிக வேற்றி மறவாதே என்று நமக்கு அறிவுறுத்தியள்ளார்களென்றால் கற்க வேண்டிய நூலை மாசற்ற ஒன்றையே கற்க வேண்டுமென்பதுதான் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

முன் சொல்லிக் காட்டியதுபோல், நாம் உய்யும் வழியைக் காட்டுவதே நூல்! அந்த நூல் வழியைக் காண வேண்டுமேயானால், குருட்டினைநீக்கும் குருவினைக் கொள்ளல்வேண்டும்.

ஆலய கோபுரத்தில் ஒன்பதுவாசல் விடப்பட்டிருந் தாலும், நுழைந்துபோய்வர ஒருவாயில் வழியாகத்தான், போய்வர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றிலிருந்தேதான் எல்லாம் தோன்றியுள்ளது. எதிலே உயரமோ, அதிலே அகலமும், எதிலே அகல உயரமோ அதிலேதான் நீளமும், ஆனதால் ஒன்றை விட்டு ஒன்றைப்பிரித்துப் பார்க்க முடியவே முடியாது, இவ்வுண்மைகளை யெல்லாம் தெரிந்து உய்யமுயற்சிப் போமாக!

தமிழ்வாழ்க! தமிழ்மறைகள் வாழ்க! தமிழினம்கூடி வாழ்க! தமிழ்நாடுவாழ்க, கொல்லாமை எனும் விரதம் எங்கும் பரவி உலகமனைத்துமே வாழ்க! வாழ்கவே!

(தொடரும்)